**செய்தி வெளியீடு எண்: 297** **நாள்: 24.05.2011**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (24.5.2011) தலைமைச் செயலகத்தில் மாநில அரசின் நிதி நிலைமை குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலத்தின் நிதி நிலைமை பற்றி நிதித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்ட மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரங்கள் குறித்தும், அதற்கான நிதி ஆதாரங்களைப் பெருக்குவது குறித்தும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களை அதிகரிப்பது குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கலந்தாலோசித்தார்கள்.

மேலும், இந்த ஆலோசனைக் கூட்டத்தில், முதன்மைத் துறைகள், இரண்டாம் நிலை துறைகள் மற்றும் சேவைத் துறைகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விவாதித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித் துறை முதன்மைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9